செ.வெ.எண்; 356

<u>பத்திரிகைச் செய்தி</u>

6/7/09

<u>மருத்துவக் கல்வி இயக்ககம்</u>

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்படி, கட்டாய உள்ளுறை பயிற்சி மாணவர்கள், மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் உதவித்தொகை உயர்த்தப்பட்டும் இம்மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளையும் பயிற்சிகளையும் புறக்கணித்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்ட வண்ணம் இருக்கிறார்கள்.

இந்நிலையில், இந்திய மருத்துவக் கழகத்தின் மருத்துவக் கல்லூரியின் ஆய்வின் போது இப்பயிற்சி மாணவர்களின் நிலை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டி இருப்பதால் அவர்களது மேற்குறித்த நிலையும் தெரிவிக்கப்படும். அது அவர்களது சான்றிதழ் மற்றும் மேற்படிப்புக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும். அதனால் பயிற்சி மருத்துவ மாணவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்கள் இன்று மாலைக்குள் (6.7.2009) பணிக்குத் திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6.7.2009
சென்னை – 10

மருத்துவக் கல்வி இயக்குநர்

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9